## பணிநிறைவு பாராட்டும் சீராட்டும் அன்பு நண்பர் அசோகனுக்கு!

காணக்கிடைக்காத செல்வச்சீமானாய்,
"குழிக்கரை" எனுமூரில்
அமிழ்துவர் பெற்றெடுத்த
ஆழிசூழ் நண்பரவர்
'உயிரினும் மேலான'
உடன்பிறப்பு என்பேனா!
"இரத்தத்தின் இரத்தமாக்கி"
உணர்வூட்டி அழைப்பேனா!
காலங்கள் உருண்டோடி
கலங்கிய போதெல்லாம்
கண்ணீரைத் துடைத்திட்ட
கதையினைச் சொல்வேனா!



தமிழ் நண்பா-என்
உமிழ் நண்பா,
அலுவலகப் பணிக்காய்;
முத்துப்போல்
முப்பத்து ஆறு வருடங்கள்
சக்கரமாய் ஓடினவே!
பாராட்டும் பத்திரமும்
மற்றவர் களுக்குத்தான்
உனக்கு இல்லை!

சங்கத் தமிழுணர்வை
பங்கமிலா வாஞ்சையுடன்
"சுங்க"த்தின் முத்திரையாய்;
" தடாகம்" கரைபுரண்டு
ஓடும்வரை ஓய்வில்லை- உனக்கு
"மே" வியத் திங்கள்
இருபத்து ஒன்பதாம்நாள்,
வெள்ளிக்கிழமை நன்னாள் -தான்
பணிஓய்வு நாளின்று,
கண்ணனின் அருள்வேண்டி;
கரம்கூப்பி வாழ்த்துகிறேன்!
சிரம்தாழ்த்தி வணங்குகிறேன்!!
நின் சீரிய தமிழ்ப்பணி;
என்றும்போல் தொடரட்டும்,
வாழிய வாழியவே!

ச.கலியமூர்த்தி மற்றும் குடும்பத்தினர். [28/05/2020]